ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# இயல்சாற்று

## ஸ்ரீ மணவாளமாமுனிகள் நியமித்தருளினது

நன்றுந் திருவுடையோம் நானிலத்தி லெவ்வுயிர்க்கும்
ஒன்றும் குறையில்லை யோதினோம் – குன்ற
மெடுத்தானடி சேரிராமானுசந்தாள்
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி
வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை
வாழி திருமல்லி வளநாடு – வாழி
சுழிபொறித்த நீர்ப்பொன்னித் தென்னரங்கன் தன்னை
வழிபறித்த வாளன் வலி.

திருநாடு வாழி திருப்பொருநல் வாழி
திருநாட்டுத் தெங்குருகூர் வாழி – திருநாட்டுச்
சிட்டத்தமர்வாழி – வாழி சடகோபன்
இட்டத் தமிழ்ப்பாவிசை.

மங்கைநகர்வாழி வண்குறையலூர்வாழி
செங்கையருள்மாரி சீர்வாழி – பொங்குபுனல்
மண்ணித் துறைவாழி – வாழிபரகாலன்
எண்ணில் தமிழ்ப்பாவிசை.

வாழியரோ தெங்குருகை வாழியரோ தென்புதுவை
வாழியரோ தெங்குறையல் மாநகரம் – வாழியரோ
தக்கோர்ப்பரவும் தடஞ்சூழ் பெரும்பூதூர்
முக்கோல் பிடித்தமுனி.

மொழியைக்கடக்கும் பெரும்புகழான் – வஞ்சமுக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான் சரண்கூடியபின்
பழியைக்கடத்து மிராமானுசன் புகழ்பாடியல்ல
வழியைக்கடத்தல் – எனக்கினியாதும் வருத்தமன்றே.

நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நரயத்துய்க்கும்
வஞ்சக்குறும்பின் வகையறுத்தேன் – மாயவாதியர்த்தாம்
அஞ்சப்பிறந்தவன் சீமதவனடிக் கன்புசெய்யும்
தஞ்சத்தொருவன் சரணாம்புயமென் தலைக்கணிந்தே.

ஊழிதொறு மூழிதொறு முலகமுய்ய
  உம்பர்க்களும் கேட்டுய்ய – அன்பினாலே
வாழியெனும் பாதம்பேஇ பொஇகைமாறன்
  மழிசையர்க்கோன் பட்டர்ப்பிரான் மங்கைவேந்தன்
கோழியர்க்கோன் தொண்டர்த்துகள் பாணன் கோதை
  குலமுனிவன் கூறியநூலோதி – வீதி
வாழியென வரும்திரளை வாழ்த்துவார்த்தம்
  மலரடி யெஞ்சென்னிக்கு மலர்ந்தபூவே.

Back